## தலைப்பு 276 – பதுளை மாவட்ட செயலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதுளை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஏப்ரல் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதுளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச்செயலாற்றல் கூற்று

#### (அ) திறைசேரி கட்டுநிதி பெறுவனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ஆண்டினுள் திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி ரூபா 4,674,517,962 ஆக இருந்த போதும் அது நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் ரூபா 4,669,060,143 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 5,457,819 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திறைசேரியிடமிருந்து கிடைத்த பணத்தை கொவிட் உதவி வழங்குவதற்காக பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட்ட போதும் குறித்த செயற்பாட்டிற்கு செலவினம் ஏற்படாத காரணத்தினால் அத்தொகையை மீண்டும் பிரதேச செயலகங்களினால் மாவட்ட செயலகத்திற்கு தீர்வுசெய்யும் போது இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் இரண்டு முறை கிடைத்த கட்டுநிதியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அது யூன் மாதம் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் மீண்டும் தீர்வு செய்தலாக குறிப்பிடப்பட்டு சரி செய்யப்பட்டது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஆ) மூலதனச் செலவினம்**

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் செலவினப் பொழிப்பு (ஏசீஏ 2(II)) மற்றும் திறைசேரி அச்சீட்டு குறிப்பு குறிப்பு (SA 10) இன் பிரகாரம் உதவிகள், மானியங்கள் மற்றும் மாற்றல்களின் பெறுமதி ரூபா **7,902,961** தொகை ஏனைய பொருட்கள் மற்றும் சேவை செலவினங்களின் கீழ் நிதிச் செயலாற்றல் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உதவிகள், மானியங்கள் மற்றும் மாற்றல்களின் பெறுமதி ரூபா 7,902,961.00 தொகை நிதிச்செயலாற்றல் கூற்றில் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் உருப்படிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட பெறுமதியில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக | உரிய படிவத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் செலவினப் பொழிப்பு (ஏசீஏ 2(II)) மற்றும் திறைசேரி அச்சீட்டு குறிப்பு குறிப்பு (SA 10) இன் பிரகாரம் ஏனைய பொருட்கள் மற்றும் சேவை செலவினம் ரூபா **83,512,297** ஆக இருந்த போதும் அப்பெறுமதிக்கு சலுகை மானியங்கள் மற்றும் மாற்றல்கள் ரூபா 7,902,961 தொகை மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினம் ரூபா 1,300,000 என ரூபா 9,202,961 தொகை கூட்டப்பட்டு ரூபா 92,715,258 என நிதிச்செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பொருட்கள் மற்றும் சேவை உருப்படியின் பெறுமானத்தில் சலுகை உதவிகள் மானியங்கள் மாற்றங்களின் பெறுமதியான ரூபா 7,902,961.00 தொகை மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினம் ரூபா 1,300,000.00 என்ற தொகை உள்ளடக்கப் பட்டு மொத்தம் ரூபா 92,715,258.00 என காண்பிக்கப்பட்டுள்ளதாக. | உரிய படிவத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

--------------------------------------------

**நிதியல்லாத சொத்துக்கள்**

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா | இது கணனி தவறொன்றாக இருந்ததுடன் திறைசேரியால் கணக்கில் | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2,576,254,526 ஆக இருந்த போதும் திறைசேரி அச்சீட்டுக் குறிப்பு SA – 82 இன் பிரகாரம் அது ரூபா 2,575,116,898 ஆக இருந்தமையால் ரூபா 1,137,628 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | பிழையொன்று காரணமாக சில உருப்படிகளை அகற்றுதல் இடம் பெற்றிருந்தது. அது 2021.12.31 இல் சமப்படுத்தப்படுத்துவதற்காக திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட மாற்றமொன்றாகவும் அது தொடர்பாக எம்மால் எந்தவொரு மாற்றமொன்று செய்யப்படவில்லை யெனவும் அறிய தருகின்றேன் | |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

**செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகிய காசுப்பாய்ச்சல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் விரிவான திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் சலுகை மானியங்கள் மற்றும் மாற்றல்கள் ரூபா 7,902,961 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | சலுகை மானியங்கள் மற்றும் மாற்றல்களின் பெறுமதியான ரூபா 7,902,961.00 தொகை தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களான ரூபா 818,206,210.00 தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக தொழிற்பாட்டு செயற்பாடு களுக்காக செலவிடப்பட்ட தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறுபாடொன்று இடம்பெறவில்லையென்பதாக | உரிய படிவத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.4 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க கட்டிடங்களிலுள்ள அனைத்து மின்சார உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட வங்கிக்கு சமர்பிக்கப்படாத ரூபா 399,950 ஆன 02 | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) நிதிப்பிரமாணம் 571(3) | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்கள் தொடக்கம் 04 வருடங்கள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த ரூபா 221,412 ஆன 03 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மஹியங்கன பி.செயல கத்திற்குரிய கணக்காய்வு விசாரணைக்குரிய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் வரை விடுவிக்க முடியாததுடன் வெளிமட பி.செயலகத் திற்குரிய வைப்புக்கள் ரூபா 174,757.26 தொகைக்குரிய கணக்காய்வு விசாரணை காணப்படுகின்றது. ரூபா 46,655.49 இற்குரிய கொடுப்பனவு செயற்பாடு களை மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடல் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை<br>---------------------- | | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.3 ஆம் பந்திகள | அரச வீடொன்றில் குடியிருக்கும் உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்தோ அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட அரச வீடொன்றுக்க உரித்தான உத்தியோகத்தரின் சம்பளத்தில் சதவீதமாக வீட்டு வாடகையாக அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 11 வீடுகளுக்குரிய வீட்டு வாடகையை அறவிடும் போது உத்தியோகத்தரின் சம்பள ஏற்றம் மற்றும் சம்பள | வீட்டு வாடகை கணக்கிடப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பகுதி பகுதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாற்றம் கருத்திற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| | (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பந்தி | மீகஹகியுல பிரதேச செயலகத்திற்குரிய அரச வீடொன்றுக்கு சிக்கன வாடகையை அறவிடுவதற்காக செயலாளரின் அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சிக்கன வாடகை அறவிடுவதற்காக செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.7 ஆம் பந்தி | உத்தியோகத்தரால் பதவிக்கு உரித்தான வீடொன்றில் குடியிருப்பதை நிராகரிக்கும் போது வீட்டுக்கு உரித்தான பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய வீட்டு வாடகை மற்றும் குடியிருக்கும் உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய வீட்டு வாடகை ஆகிய இரண்டில் கூடுதலான தொகையான ரூபா 267,639 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | குடியிருப்பவரிடமிருந்து எதிர்காலத்தில் அறவிட்டு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். |
| | (iv) XIX ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | பதுளை பிரதேச செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தத்திற்கு உள்ளான உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் 04 பேரிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து ரூபா 196,701 ஆன கடன் மீதிகளை தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு பணிப்பாளர் | மாகாண சபைக்கு உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றால் அம்மாகாண சபையிடமிருந்து குறித்த | ஊவா மாகாண சபைக்கு கடன் மீதிகளை தீர்வு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தி | கடனை ஒரே தடவையில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு அவ்வாறு அறவிட முடியாவிட்டால் மாதாந்த தவணையாகவோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும் மாகாண சபையின் நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 10 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 653,965 ஆன கடன் மீதிகளை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தவணயாகவோ அல்லது மீதிகளை தீர்வுசெய்தல் இடம்பெறவில்லையென | |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மீகஹகியுல பிரதேச செயலகத்தின் வாகனமொன்றின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்வில்லை. | கெப் வண்டியொன்றில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் மற்றைய கெப் வண்டியின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கடமை வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 முற்பணங்களை வழங்குதலும் தீர்வு செய்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த தவறான வரவு வைத்தல் மற்றும் தவறாக செலவு வைத்தல் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடனின் கீழ் ரூபா 321,377 ஆன கடன் மீதிகளும் செலுத்த வேண்டிய கடனின் கீழ் ரூபா 12,035 ஆன மீதியொன்றும் முற்பணக் கணக்கில் | இக்கடன் மீதிகளில் 05 ஆண்டு காலமாக ரூபா 80,300 மீதியான கடன் தொகையை மாத்திரமே தீர்வு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்தவறான குறிப்புக்களை இனங்கண்டு 03 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரை காலவீச்சொன்று கடந்தருந்த போதும் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 2.3 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹல்துமுல்ல மற்றும் ஊவா பரணகம பிரதேச செயலகங்களினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்ட ரூபா 57,016,464 ஆன 66 காசோலைகளை நி.பி 388 மற்றும் நி.பி 389 இன் பிரகாரம் பெறுவோனுக்கு கையளிக்காமல் 2021 பெப்ரவரி 16 ஆந் திகதிவரை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்து. அத்தோடு அக்காசோலைகள் வழங்கப்பட்ட திகதி முதல் 30 நாட்கள் செல்லுபடிக் காலமும் காலாவதியாகியிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | நி.பி 389 இன் பிரகாரம் காசோலைகளை பெறுவோனுக்கு கையளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாமல் கைவிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொருளாதார அலுவல்கள், அமைச்சின் 2014 ஆம் ஆண்டில் மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மரங்கஹவெல சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஹல்துமுல்ல பிரதேச | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | வேலை பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செயலகத்தினால் ஒப்பந்தக்காரருடன் 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி ரூபா 1,983,794 ஆன பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2017 மார்ச் 21 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்படாத இக்கட்டிடம் ஹல்துமுல்ல சுகாதார மருத்துவ உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாணத்திற்காக ரூபா 1,954,000 தொகை செலவிடப்பட்டிருந்தது, 2021 பெப்ரவரி 23 கணக்காய்வு திகதி வரையிலும் இக்கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் கட்டிடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>I கட்டிடங்கள் பாதுகாப்பற்ற வகையில் காணப்பட்டதுடன் நுழைவு வீதியும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>II நிலம், உட்கூரை மற்றும் வெளியே சாந்திடப்பட்டிருக்கவில்லை.<br><br>III நீர், மின்சாரம் மற்றும் மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br><br>IV கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கதவுகள் மற்றும் யன்னல்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் முறையற்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | பொருளாதார அலுவல்கள், அமைச்சின் 2014 ஆம் ஆண்டில் மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உஸ்ஸல்ல சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஹல்துமுல்ல பிரதேச செயலகத்தினால் ஒப்பந்தக்காரருடன் 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 1,999,998 ஆன உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாணத்திற்காக ரூபா 1,773,300 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், இக்கட்டிடம் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2021 பெப்ரவரி 23 கணக்காய்வு திகதி வரையிலும் இக்கட்டிடம் சிகிச்சை செயற்பாடுகளுக்காக எடுக்கப்படா | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | வேலை பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

திருந்ததுடன் கட்டிடத்தின் உட்கூரை அமைக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு நீர், மின்சாரம் மற்றும் ஆரோக்கிய நலன் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 உள்நாட்டு நிதியங்களிலிருந்து செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) லுனுகல ஹொப்டன் பீ பிரிவிற்கு நீர் வழங்கல் - பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | | |
| பொருளாதார அலுவல்கள், அமைச்சின் நிதிஏற்பாடுகளின் கீழ் லுனுகல பிரதேச செயலகத்தினால் 2017 ஒக்தோபர் 12 ஆந் திகதி தனியார் ஒப்பந்த நிறுவனமொன்றுடன் ரூபா 2,661,859 ஆன உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 12 ஆந் திகதி செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்தக்காரரின் வேண்டுகோளின் பேரில் 2019 திசெம்பர் 12 ஆந் திகதி வரை 05 சந்தர்ப்பங்களில் நிர்மாணத்தின் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 906,558 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதும் ஒப்பந்தக்காரர் செயற்திட்டத்தின் வேலைகளை கைவிட்டிருந்தார். ஒப்பந்தக்காரருக்குரிய செயலாற்றல் பிணையின் செல்லுபடிக்காலம் நீடிக்கப் படாமையால் ஒப்பந்தக்காரரால் பிணைப்பொறுப்பினை விடுவித்துக் | அரசிற்கு ஏற்பட்ட நட்டமான ரூபா 133,093.00 ஆன தொகை உரிய ஒப்பந்த நிறுவனத்தினால் வெளிமட பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக அரசிற்கு அறவிட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ள துடன் குறித்த தொகையை மாவட்ட செயலகத்திற்கு வழங்குமாறு வெளிமட பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டு காசோலை கிடைத்தவுடன் அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதாக | நிர்மாண செயற்திட்டங்கள் அவ்வப்போது கண்காணிக்கப்பட வேண்டியதுடன் பிணை பொறுப்பின் செல்லுபடிக் காலத்தை நீடிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| கொண்டிருந்ததுடன் அரசிற்கு அறவிடக்கூடியதாக இருந்த ரூபா 133,093 தொகையை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. | | |
| **(ஆ) செயற்திட்ட கணக்குகளில் காசு மீதி**<br>--------------------------------------- | | |
| பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்களை மேவுகை செய்யும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 48 கிராம சக்தி மக்கள் சங்கங்களுக்காக வெவ்வேறு செயற்திட்டளுக்கு ஒரு சங்கத்திற்கு ரூபா 1,000,000 வீதம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 48,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 38,151,040 தொகை செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் வங்கிக் கணக்குகளில் விளைவற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கிராம சக்தி மக்கள் கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளதால் புறம்பான நிறுவனமொன்றாக செயற்படுகின்றது. செயற்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் கிராம சக்தி மக்கள் கம்பனியின் உத்தியோகத்தர்களின் அக்கரை குறைவாக இருந்தமையால் வங்கிக் கணக்குகளில் பணம் சேமிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டம் தொடர்பாக கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப் வேண்டும். |

## 3.3 நட்டங்களும் சேதங்களும்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நட்டங்களும் சேதங்களும் | | |
| ரிதீமாலியத்த பிரதேச செயலகத்திற்குரிய வாகனமொன்று 2017 யூலை 29 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டதால் ரூபா 6,349,333 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் அதற்காக காப்புறுதி கம்பனியால் 2020 யூன் 25 திகதி செலுத்தப்பட்ட | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் ஆகக்கூடிய பொறுப்பு ரூபா 3,060,000 ஆன நட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் காப்புறுதி நிறுவனம் | நட்டங்கள் தொடர்பாக பரிசோதனை குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,500,000 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் வாகனம் திருத்தம் செய்யப்படாதிருந்ததுடன் விபத்து இடம்பெற்று 03 ½ ஆண்டுகளாக விபத்திற்குட்பட்ட வண்டியை மாவட்ட செயலகத்தின் வாகன நிறுத்துமிடத்தில் விளைவற்ற வகையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. நி.பி 104(4) இன் பிரகாரம் விபத்து தொடர்பாக பரிசோதனை குழுவின் அறிக்கையின் பிரகாரம் காப்புறுதி கம்பனியால் செலுத்தப்படாத அளவினை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப் பட்டிருக்கவில்லை. | வழங்கிய மதிப்பீட்டுத் தொகை ரூபா 2,500,000 ஆகும். | |
| (ஆ) | பதுளை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பொறுப்பில் காணப்பட்ட 07 வாகனங்கள் விபத்திற்குட்பட்டு 02 ஆண்டு முதல் 22 ஆண்டுகள் வரையான காலவீச்சொன்று கடந்திருந்த போதும் இடம்பெற்ற நட்டத்தின் பெறுமதி ரூபா 6,046,930 தொகையை பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது முறையான அங்கீகாரமொன்றின் கீழ் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்நட்டங்கள் சேதங்கள் அனைத்தும் முறையாக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படாமல் முன்னைய ஆண்டுகளிலிருந்து இருந்து வரும் மீதியாகும் | நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக பரிசோதனை குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தில் பட்டியலிடப்பட்ட வீடுகளுக்கு | கலந்துரையாடி தேவையான அனைத்து | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | உரித்தான 03 பதவிகளுக்காக அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் தேவையான வீடுகள் 04 ஆக இருந்த போதும் பட்டியலிடப்பட்ட 06 வீடுகள் பராமரித்துச் செல்லப்படுகின்றன. | நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிவப்பதாக | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | பட்டியலிடப்பட்ட வீடொன்றுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 244,667 ஆன நிலுவை வீட்டு வாடகையை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒரு வீட்டின் நிலுவை வாடகையான ரூபா 87,403 அறவிடப் பட்டுள்ளதுடன் மற்றை வீட்டின் நிலுவை வீட்டு வாடகையான ரூபா 244,667 தொகையை வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | பதுலுபிட்டிய முதுன்பிட்ட கொடல்ல காணியில் 19 அடி 06 அங்குல சுற்று மற்றும் 75 அடி அளவிலான உயரமான மஹோகனி வகையான மரத்தை வெட்டி வீழ்த்துவதற்காக பதுளை பிரதேச செயலாளரால் 2020 சனவரி 31 ஆந் திகதி ரம்புக்பொத ரஜமஹா விஹாரையின் நம்பிக்கையாளருக்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருந்தது. வெட்டி வீழ்த்தப்பட்ட மரத்திற்குரிய காணி தொடர்பாக பதுளை மாநகர சபையினால் உரித்தினை கோரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை பிரதேச செயலாளரினால் காணியின் சீரான உரித்தினை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.<br>வெட்டி வீழ்த்தப்பட்ட பெறுமதியான மஹோகனி மரக் கட்டைகள் வெட்டப்பட்ட இடத்திலேயே பாதுகாப்பற்ற வகையில் காணப்பட்டன. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை | மரத்தை வெட்டும் போது உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ள வேண்டியதுடன் வெட்டி வீழ்த்தப்பட்ட மரம் தொடர்பாக பொருத்தமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். |

## 4. நல்லாளுகை

### உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 09 பிரதேச செயலகங்களில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 06 பிரதேச செயலகங்களில் மாத்திரம் உள்ளகக் கணக்காய்வு மேறகொள்ளப்பட்டன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை மாவட்ட செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளது. | பதவியணியினர் தகவல்கள் ஒவ்வொரு மாதமும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினதும் பொது நிர்வாக அமைச்சினதும் இணையத் தளத்தில் வெளியிடப்படுவதால் அந்த அமைச்சும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளவறான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட தரம் | 57 | 41 | 1 |
| மூன்றாம் தரம் | 48 | 28 | 2 |
| இரண்டாம் தரம் | 1170 | 1011 | 15 |
| ஆரம்ப தரம் | 139 | 132 | 0 |
| மொத்தம் | 1414 | 1212 | 20 |

இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 220 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை